மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.303/2017</u>

2025ம் ஆண்டு ஜுலை மாதம் 10ம் நாள் வியாழக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுவாமிநாதன் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>10.07.2025 வா.சா.1 மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு 4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் வாரிசு சான்றிதழ் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் எனது வழக்கறிஞர் யார் என்றால் யுவஸ்ரீ எனது வழக்கறிஞர் எனது பிறந்த தேதி 9/4/1989 எனது பிறப்பு எந்த தேதியில் பதிவு செய்யப்பட்டது என்றால் 10.04.1989 இல் பதிவு செய்யப்பட்டது பாஷா ஒன்று ஆவணமான எனது பிறப்பு சான்றிதழை நான் 04.01.2019 ல் தான் பெற்றுள்ளேன் என்றால் எனது பெயரை பதிவு செய்து பெற்றதால் மேற்படிதேதியில் பெறப்பட்டது ஆனால் அசல் பிறப்பு சான்றிதழ் 10.04.1989 லேயே பதிவு செய்யப்பட்டது. வா.சா.ஆ.3 ஆவணத்தில் நிலையான வீட்டு முகவரியாக கதவு எண் இல்லாமல் முத்தூர் ரோடு வெள்ளகோவில் என கண்டுள்ளது என்றால் சரிதான்.

2. நான் என் தகப்பனார் என்று சொல்லும் பழனிச்சாமியின் தகப்பனார் பெயர் என்னவென்றால் முத்துசாமி என் தகப்பனாரின் தாயார் பெயர்

கருணையம்மாள்.முத்துசாமி மற்றும் கருணையம்மாள் ஆகியோர்களின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இறப்பு சான்றிதழ் உள்ளது அவர்களுக்கு வாரிசு சான்றிதழ் இல்லை முத்துசாமி மற்றும் கருணையம்மாள் ஆகியவர்களின் இறப்பு சான்றிதழை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். பழனிச்சாமிக்கும் சரஸ்வதி என்பவருக்கும் எந்த தேதியில் எங்கு வைத்து திருமணம் நடந்தது என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

3. அது 1974 ல் நான் பிறப்பதற்கு முன்பு நடந்ததாக சொன்னார்கள் பழனிச்சாமி என்பவரின் முதல் மனைவியான சரஸ்வதி என்பவரின் குடும்ப விவரங்கள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் சரஸ்வதிக்கு அண்ணன் ஒருவர் உள்ளார் அவர்கள் பாதுகாப்பில் தான் சரஸ்வதி தற்போது உள்ளார். சரஸ்வதி என்பவரின் தகப்பனார் ஊர் கச்சேரி வலசு சரஸ்வதியின் பெற்றோர் பெயர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அவர்கள் எப்போது இறந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான் சரஸ்வதியின் உடன் பிறந்தவர் ஒரு அண்ணன் மட்டும்தான் அவர் பெயர் எனக்கு தெரியாது சரஸ்வதியின் அண்ணன் என்ன முகவரியில் வசித்து வருகிறார் என்றால் வெள்ளகோவில் முத்தூர் சாலையில் வசித்து வருகிறார். தற்போது அவர் இறந்துவிட்டார் அவரது மகன் மற்றும் மனைவி ஆகியோர் உள்ளார்கள். சரஸ்வதி பழனிச்சாமி என்பவர் உடன் எவ்வளவு காலம் வசித்து வந்தார்கள் எப்போது பிரிந்து சென்றார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

4. என் அம்மா சொல்லி எனக்கு அது தெரியும். அந்த பழனிச்சாமிக்கும் சரஸ்வதி என்பவருக்கும் குழந்தைகள் ஏதும் இல்லை என்றால் சரிதான் மேற்படி சரஸ்வதி என்பவர் என்னுடனும் என் தாயாருடனும் எப்போதும் சேர்ந்து வசிக்கவில்லை என்றால் சரிதான் சரஸ்வதி பழனிச்சாமியை பிரிந்து

சென்றதற்கு பின்னிட்டு எங்கு என்ன வேலை செய்து வருகிறார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான் சரஸ்வதியை நான் நேரில் பார்த்துள்ளேன் என்றால் ஆமாம். கடைசியாக நான் அவரை எப்போது பார்த்தேன் என்றால் ஒரு 3 ஆண்டுகளுக்கு முன்பு பார்த்தேன். சரஸ்வதி தற்போது நல்ல முறையில் நடமாடி வருகிறார் என்றால் சரிதான். அவரின் வேலையை அவரே செய்து வருகிறார் என்றால் ஆமாம். வழக்குரையில் சரஸ்வதிக்கு புத்தி சுவாதீனம் இல்லை என்று நான் சொல்லியுள்ளதற்கு ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5. எதன் அடிப்படையில் சரஸ்வதிக்கு புத்தி சுவாதீனம் இல்லை என்று நான் சொல்கிறேன் என்றால் பொதுவான நபர்களிடம் அவர் பேசும் முறை பழகும் முறை மற்றும் அவர் உபசரிக்கும் முறை ஆகியவற்றை வைத்து அவருக்கு புத்தி சுவாதீனம் இல்லை என்று நான் சொல்கிறேன். சரஸ்வதிக்கு நீதிமன்ற பாதுகாவலரை நியமனம் செய்யச் சொல்லி என் வழக்குரையில் ஏதேனும் சொல்லி உள்ளேன் என்றால் இல்லை நானாகத்தான் சரஸ்வதி கனகாம்பரம் என்பவரின் பாதுகாப்பில் உள்ளதாக நான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கனகாம்பரம் என்பவர் தான் சரஸ்வதி என்பவரின் சகோதரரின் மனைவி என்பதை காட்ட நான் இந்நீதிமன்றத்தில் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம் சரஸ்வதி தற்போது கனகாம்பரம் என்பவருடன் தான் வசித்து வருகிறார் என்பதற்கு நான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6. எனது வழக்குரையிலும் எனது முதல் விசாரணை சாட்சியத்திலும் பழனிச்சாமி என்பவருக்கும் என் தாயார் நல்லமுத்து என்பவருக்கும் எந்த தேதியில் திருமணம் நடந்தது என்பதை குறித்து நான் குறிப்பிட்ட எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான் பழனிச்சாமிக்கும் என் தாயாருக்கும் திருமணம் நடந்தது என்பதை காட்ட மேற்படி திருமணம் சம்பந்தப்பட்ட அழைப்பிதலையோ பிற ஆவணங்களையோ நான் தாக்கல் செய்யவில்லை

என்றால் சரிதான். மேற்படி பழனிச்சாமியும் என் தாயாரும் எந்த முகவரியில் கணவன் மனைவியாக வசித்து வந்தார்கள் என்பது குறித்து எனது வழக்குரையிலும் முதல் விசாரணை சாட்சியத்திலும் நான் சொல்லவில்லை என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை ஆனால் இருவரும் முத்தூர் ரோட்டில் தான் வசித்து வந்தார்கள்.

7. மேற்படியார்கள் முத்தூர் சாலையில் வசித்து வந்தார்கள் என்பதை காண்பிக்க நான் நீதிமன்றத்தில் எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் பழைய குடும்ப அட்டை உள்ளது அதை எனது வழக்கறிஞரிடம் நான் கொடுத்துள்ளேன். என் தாயாருக்கு ஆதார் அட்டை மற்றும் குடும்ப அட்டை உள்ளது என்றால் ஆமாம். மேற்படி ஆவணங்களை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பழனிச்சாமியும் என் தாயாரும் கணவன் மனைவி என்பதை காண்பிக்கும் வகையில் நான் எந்த ஒரு ஆவணத்தையும் என் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எனது தாயாரை நான் இதுவரை ஒரு சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் வெளிநாட்டில் வேலை பார்த்து வந்ததால் இந்த வழக்கை எனக்கும் சேர்த்து என் தாயார் நடத்த பொது அதிகாரம் வழங்கி அதன் அடிப்படையில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. நான் எந்த நாட்டில் வசித்து வந்தேன் என்பதற்கும் நான் எப்போது இந்தியா திரும்பி வந்தேன் என்பதற்கும் நான் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டபோது ஜப்பான் நாட்டில் வசித்து வந்தேன். 1992 ஆம் ஆண்டு பழனிசாமி குடி போதைக்கு அடிமையாகி 5ம் பிரதிவாதியை ஆசைநாயகியாக வைத்துக் கொண்டதாக நான் வழக்குரையில் சொல்லியுள்ள விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான் என் தாயார் சொல்லி எனக்கு தெரியும். 5ம் பிரதிவாதி வேலை செய்ததாக சொல்லப்படும் செங்கல் சூளை

எங்கு அமைந்துள்ளது அது யாருக்கு பாத்தியப்பட்டது என்பது குறித்த விபரங்களை நான் என் வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பழனிச்சாமி 5ம் பிரதிவாதியை ஆசை நாயகியாக வைத்துக்கொண்டு தன்னுடன் சேர்ந்து வாழவில்லை என்று என் தாயார் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

9. பெரியவர்களை வைத்து பஞ்சாயத்து பேசப்பட்டதா என்பதை பொறுத்து நான் என் வழக்குரையில் குறிப்பிட்ட எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். பழனிச்சாமி இறக்கும் வரை என் தாயாருடன் சேர்ந்து வசித்து வந்ததாக நான் என் வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பழனிச்சாமி எந்த தேதியில் என் தாயாரை விட்டு பிரிந்து சென்றார் என்று நான் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். தேதி ஞாபகம் இல்லை எனக்கு நினைவு தெரிந்தது முதல் நான் பழனிச்சாமி உடன் சேர்ந்து வசித்து வரவில்லை என்றால் சரியல்ல.

10. நான் ஐந்தாம் வகுப்பு படிக்கும் வரை பழனிச்சாமி உடன் சேர்ந்து வசித்து வந்தோம். ஐந்தாம் வகுப்பு படிக்கும் வரை பழனிச்சாமி என்னுடன் வசித்து வந்தார் என்ற விபரத்தை எங்கள் வழக்குரையிலும் என் முதல் விசாரணை சாட்சியத்திலும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். 5 ஆம் வகுப்பு வரை பழனிச்சாமி தான் என்னை பள்ளியில் சேர்த்து கட்டணங்கள் செலுத்தினார் என்பதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் பழனிச்சாமி தான் என்னை பள்ளியில் சேர்த்தார் ஆனால் கட்டணங்களை என் பாட்டி கருணையம்மாள் தான் செலுத்தினார். அதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

11. 5ம் பிரதிவாதி ஒரு ரங்கசாமி நாயக்கர் என்பவரின் மனைவி என்று நான் என் முதல் விசாரணை சாட்சியத்தில் எதன் அடிப்படையில் சொல்லியுள்ளேன் என்றால் என் பெற்றோர்கள் சொன்னதன் அடிப்படையில்

சொல்லி உள்ளேன் அதற்கு பின்னிட்டு மேற்படியார் தன்னை பழனிச்சாமியின் மனைவி என்பதால் இந்த வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்க வேண்டும் என்று சொல்லி அந்த மனு அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். பின்னிட்டு நான் வழக்குரையை திருத்தும்போது கணவர் பெயர் தெரியாத விஜயா என்று வழக்குரையில் திருத்தம் செய்து உள்ளோம் என்று சொன்னால் சரிதான். நீதிமன்றத்தில் தகவல்களை மாற்றி மாற்றி சொல்லி ஏமாற்றி வாரிசு சான்றிதழ் பெறுவதற்காக கணவர் பெயர் தெரியாத விஜயா என்று வழக்குரையில் திருத்தி உள்ளோம் என்றால் சரியல்ல.

12.நாங்கள் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4 ஆவணமான கிரைய ஆவணத்தில் கண்டுள்ள விஜயா என்பவரின் புகைப்படமும் அடையாள அட்டைகளோ அதில் இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் கண்டுள்ள விஜயா என்பவர் தான் ஐந்தாம் பிரதிவாதி விஜயா என்பதற்கு நாங்கள் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல ஏதோ ஒரு விஜயா என்பவரால் ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணத்தை வைத்துக்கொண்டு அதில் கண்டுள்ள நபர் ஐந்தாம் பிரதிவாதி தான் என்று நாங்கள் சொல்வது ஏற்கத்தக்கதாக இல்லை என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதியான வரதராஜ் என்பவர் எந்த தேதியில் எங்க வைத்து பிறந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

13. 4ம் பிரதிவாதியின் மரபணுவிற்கும் பழனிச்சாமி மற்றும் எங்கள் மரபணுவிற்கும் சம்பந்தமில்லை என்று நாங்கள் வழக்குரையில் சொல்லியுள்ள சந்ததிகளை நிரூபணம் செய்யும் விதமாக நாங்கள் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்றால் சரிதான். என் அப்பா 2016 ஆம் ஆண்டு இறந்து விட்டதால் அது சம்பந்தமாக நடவடிக்கைகள் எதுவும் எடுக்க முடியவில்லை. என் தகப்பனார் இறந்து விட்டதால் எனது மரபணுவையும் நாலாம் பிரதிவாதியின் மரபணுவையும் சோதித்து பார்த்தால் உண்மை விபரம் தெரியும் என்றால் சரிதான். எனது மரபணுவும் பழனிச்சாமி

என்பவரின் மரபணுவும் ஒன்றுதான் என்பதை காட்ட இதுவரை நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

14. நான் என் தகப்பனார் என்று சொல்லும் பழனிச்சாமி என்பவரின் ஆதார் அடையாள அட்டையோ வாக்காளர் அட்டையோ குடும்ப அட்டையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் பழைய குடும்ப அட்டையை நான் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். பழனிச்சாமி இறக்கும் வரை யாருடன் எந்த முகவரியில் வசித்து வந்தார் என்ற விபரத்தை நான் எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான் பழனிச்சாமி இறக்கும் சமயத்தில் அவர் பெயரிலான குடும்ப அட்டையில் யார் யார் பெயர் இருந்தது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கடந்த 28.12.2016 அன்று இறந்து போன முத்துசாமி மகன் பழனிசாமி என்பவரின் வாரிசுகள் நான் தான் என்பதை காட்டுவதற்கு நான் எந்த ஆவணத்தையும் ஒப்படைக்கவில்லை என்றால் எனது பிறப்பு சான்றிதழ் பள்ளி மாற்றுச் சான்றிதழ் ஆகியவற்றை நான் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேன்.

15. நான் சொல்வது போல் எனது பள்ளி மாற்று சான்றிதழை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எனது பிறப்பு சான்றிதழில் பழனிச்சாமி என்பவர் தகப்பனார் பெயர் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான் நான் பழனிச்சாமி என்பவரின் மகன் என்பதை காண்பிக்கக் கூடிய வகையில் எனது ஆதார் அட்டை எனது குடும்ப அட்டை மற்றும் எனது வாக்காளர் அடையாள அட்டை ஆகியவற்றை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆதார் அட்டையை நான் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பழனிச்சாமி என்பவரின் இறப்பு சான்றிதழில் ஈரோடு ரோடு வெள்ளகோவில் என்ற முகவரிதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

16. மேற்படி ஈரோடு ரோடு வெள்ளகோவில் என்ற முகவரியில் நான் வசித்து வந்தேன் என்பதை காட்டக் கூடிய ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் பழைய குடும்ப அட்டையில் அந்த முகவரிதான் உள்ளது. எந்த வருடத்தைச் சார்ந்த குடும்ப அட்டை என்றால் 2000 வருடத்திற்கான குடும்ப அட்டை. நான் சொல்வது போலவளந்த குடும்ப அட்டையும் என் வசம் இல்லை என்றும் அதனால் தான் அதை நான் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

17. பழனிச்சாமி என்பவரின் இறப்பை நான் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல நான் தான் பதிவு செய்தேன். மேற்படி இறப்பு சான்றிதழை நான் பதிவு செய்தேன் என்பதற்கான ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்றத்தில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பழனிச்சாமி என்பவரின் இறப்பு சான்றிதழில் இறந்து போன நபரின் ஆதார் எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி இறப்பு சான்றிதழில் கண்டுள்ள 4/379 என்ற வீடு எனக்கோ என் தகப்பனாருக்கோ பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணங்களையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் என் வழக்குரையில் கோவை ரோட்டில் வசித்து வருவதாக தான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். எந்த ஆண்டிலிருந்து நாங்கள் அந்த முகவரியில் வசித்து வருகிறோம் என்றால் சுமார் 2000 ஆவது ஆண்டுக்கு முன்பு இருந்து அங்கு வசித்து வருகிறோம் பழனிச்சாமி இறந்ததற்கு பின்பு அவரது சொத்துக்களை நாங்கள் அனுபவம் செய்து வருவதாக சொல்லி உள்ளதற்கு ஆவணங்கள் எதையும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 குறிப்பானையை நான் தான் மனு கொடுத்து வாங்கினேன் என்றால் சரிதான்.

18. அதில் இறந்து போன பழனிச்சாமிக்கு 2 மனைவிகள் என்று மட்டும் தான் சொல்லப்பட்டுள்ளது யார் யார் என்று பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான் பழனிச்சாமியின் மனைவி சரஸ்வதி என்பவர் ஜீவனாம்சம் கேட்டு

பழனிச்சாமி மீது அ.வ.எண். 87/2005 என்ற வழக்கை தாக்கல் செய்ததாக நான் வழக்குரையில் சொல்லி உள்ளேன் அந்த விபரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் எனது வழக்கறிஞர் மூலமாக தெரிந்து கொண்டேன். வழக்குரையில் அந்த விபரத்தையும் வழக்கறிஞர் சொன்னதன் அடிப்படையில் தான் நான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.

19. அந்த வழக்கை சரஸ்வதி யார் யார் மீது தாக்கல் செய்திருந்தார் என்றால் ஜீவனாம்சம் என்றால் கணவர் பெயரில் தான் தாக்கல் செய்வார்கள். சரஸ்வதி தாக்கல் செய்த வழக்கில் நான் தரப்பினர் கிடையாது என்றால் சரிதான். அந்த வழக்கு என்ன முடிவானது என்பது எனக்கு தெரியுமா என்றால் 2008 ஆம் வருடம் மாதம் 750/- ரூபாய் ஜீவனாம்சம் கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பானது. சரஸ்வதி அசல் வழக்கு எண் 134/2011 என்ற வழக்கை தாக்கல் செய்ததாக நான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.அந்த விபரம் எனக்கு யார் சொல்லி தெரியும் கனகாம்பரம் என்பவர் சொல்லி தெரியும். அந்த வழக்கு யார் யார் மீது தாக்கல் செய்யப்பட்டிருந்தது என்றால் சொத்தை விற்கக் கூடாது என்று தடை உத்தரவு கோரி விஜயா மற்றும் வரதராஜன் ஆகியோர்கள் பெயரில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் இந்நீதிமன்றத்தின் அசல் வழக்கு எண்.134/2011 வழக்குரை என்றால் சரிதான்.

20. இந்த வழக்கை சரஸ்வதி நேரடியாக அவரே தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் சரஸ்வதிக்கு புத்தி சுவாதீனம் இல்லை என்பதும் அவரது பாதுகாவலர் கனகாம்பரம் என்றும் விவரங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான் பழனிச்சாமி என்பதற்கு பாத்தியப்பட்ட சொத்தை மோசடியாக 4ம் பிரதிவாதி அடைய முயற்சி செய்வதாக எனது வழக்குரையில் சொல்லி உள்ளேன் அது சம்பந்தப்பட்ட பழனிச்சாமி பெயரிலான சொத்து ஆவணங்களை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஒரு செட்டில்மெண்ட் ஆவணத்தை

ஒப்படைத்துள்ளேன். நான் சொல்வது போல் எந்த ஒரு ஆவணத்தையும் இந்த வழக்கில் நான் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

21. என்னிடம் காட்டப்படும் செட்டில்மெண்ட் ஆவணம் முத்துசாமி கவுண்டர் மகன் பழனிசாமி கவுண்டர் என்பவரால் பழனிச்சாமி கவுண்டர் மகன் வரதராஜன் என்பவருக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் நான் வழக்குரையில் சொல்லி உள்ள வெள்ளகோவில் கிராமம் ரீ.சர்வே.எண் 368/பி 92 ல்சென்ட் விஸ்தீரணத்தை பொருத்த ஆவணம் என்றால் சரிதான் இப்படி ஆவணம் 19.01.2011 இல் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

22. மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.1 ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணத்தில் நீங்கள் எனது மகன் நான் உங்கள் தகப்பனார் என்ற வாசகங்கள் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி செட்டில்மென்ட் ஆவணத்தில் கண்டுள்ள வரதராஜ் என்பவர் தான் இந்த வழக்கின் 4ம் பிரதிவாதி என்றால் சரிதான். இறந்து போன பழனிச்சாமி என்பவர் நாலாம் பிரதிவாதியை தனது மகன் என்று சொல்லி பி.வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ள நிலையில் நான் 4ம் பிரதிவாதி பழனிச்சாமியின் மகன் அல்ல என்றும் வேறு ஒருவரின் மகன் என்றும் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

23. 4ம் பிரதிவாதிக்கு பழனிச்சாமி என்பவர் செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் பாத்தியப் படுத்திய சொத்தினை மோசடியாக அடைவதற்காக தான் 4 ஆம் பிரதிவாதி பழனிச்சாமியின் மகன் அல்ல என்றும் ஐந்தாம் பிரதிவாதி விஜயா பழனிசாமியின் மனைவி அல்ல என்றும் மேற்படியார்களின் உறவு முறையை கொச்சைப்படுத்தி இந்த வழக்கை நாங்கள் நடத்தி வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. செங்கல் சூளைக்கு வேலைக்கு வரும்போது விஜயா வரதராஜை அங்கு அழைத்து வந்தார் என்ற விபரம் என் பெற்றோர் சொல்லி எனக்கு தெரியும்.

24. நான் சொல்வது உண்மை அல்ல என்றும் பழனிச்சாமி என்பவரின் மகன்தான் வரதராஜ் என்றும் சொன்னால் சரியல்ல நான் முத்துசாமி கவுண்டர் மகன் பழனிச்சாமி என்பவரின் வாரிசு இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் மேற்படியாரின் வாரிசு என்பதை காட்ட எந்த ஒரு ஆவணத்தையும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனவே நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

(மேற்படி 4ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையே ஐந்தாம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையாகவும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது)

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.07.10 19:01:34 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்